## பொலிஸ் வெகுமதி நிதியம் - 2023

-----------------------------------------------------------

### 1. நிதிக் கூற்றுக்கள்

#### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பொலிஸ் வெகுமதி நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154 (3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினது ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

#### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

#### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஒன்றாக காணப்பட்டதுடன், மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதலும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை

மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை மாற்றியமைக்க வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் மாத வங்கி இணக்க கூற்றில் இனங்காணப்படாத பெறுவனவாக காண்பித்திருந்த ரூபா 18,600,000 தொகை உணவகம் மற்றும் ஒற்றையர் குடியிருப்பு இல்லங்களை நிர்மாணிப்பதற்காக விஷேட அதிரடிப்படைக்கு வழங்கப்பட்ட முற்பணமாவதுடன், ஆண்டிறுதியில் அத் தொகை செலவிப்படாது மீள் அனுப்பப்பட்டிருந்த போதும், அதனை சரியாக இனங்கண்டு கணக்குகளுக்கு | புணம் மீள் அனுப்புவதனை சீராக்கம் செய்தல் தவறுதலாக விடுபட்டுள்ளது. 2024 ஆண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது இந்த தவறை சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | ஆண்டிற்குரிய செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | சீராக்கம் செய்யாததால் வருமானக் கூற்றில் உணவகம் மற்றும் ஒற்றையர் குடியிருப்பு இல்லங்களை நிர்மாணிப்பதற்கான செலவு ரூபா 18,600,000 தொகை கூடுதலாகவும், ஆண்டின் மிகை அவ்வளவால் குறைத்தும் காண்பிக்கப்பட்டு இருந்தது. அவ்வாறே செலவிடப்படாத இத் தொகையை பண மீதியுடன சீராக்கம் செய்யப்படாததால் நடைமுறை சொத்துக்கள் அப் பெறுமானத்தால் குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | குற்றவியல் நியாயம் தொடர்பான முழுநேர பட்டதாரி பாடநெறியை கற்பதற்காக நிதியத்திலிருந்து பொலிஸ் அலுவலர் ஒருவருக்கு செலுத்தியிருந்த ரூபா 550,000 தொகை, இவ்வலுவலர் பாடநெறியிலிருந்து விலகியதன் மீது மீள் அறவீடு 2023 ஒக்டோபர் 23 திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும், அப் பெறுமதியை நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய தொகையாக இனங்கண்டு கணக்கீடு செய்யாததன் காரணமாக வருமான கூற்றில் நலன்புரி செலவு மற்றும் நிதி நிலைமை கூற்றில் நடைமுறை சொத்துக்கள் முறையே அப் பெறுமானத்தால் கூடுதலாக மற்றும் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனத்தின் மூலம் அறவிட வேண்டிய ரூபா 550,000 தொகையை மீள் அறவிட நடவடிக்கை எடுப்பதுடன், 2024 ஆண்டு நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது இத் தவறை சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | ஆண்டிற்குரிய பெறவேண்டிய வருமானங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும் |
| (இ) | மீள்ளாய்வாண்டு நீதிமன்ற தண்டப்பண வருமானம் மற்றும் ஆண்டிறுதி கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பண வருமானம் கணக்கீடு செய்யப்படும் போது 04 நீதிமன்றங்களிற்குரிய தண்டப்பண வருமானம் ரூபா 8,912,551 தொகை கூடுதலாகவும், மேலும் 06 நீதிமன்றங்களிற்குரிய தண்டப்பண வருமானம் ரூபா 10,511,268 குறைவாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. இதன் காரணமாக வருமானக் கூற்றில் நீதிமன்ற தண்டப்பண வருமானம் மற்றும் நிதி நிலைமை கூற்றில் கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 1,598,717 தொகை குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பிரிவு அலுவலகத்தின் மூலம் அறிக்கையிடப்பட்ட தண்டப்பண பெறுமதி மற்றும் நீதிமன்றத்தின் மூலம் வெகுமதி நிதியத்திற்கு அனுப்பப்பட்ட காசோலை பெறுமதிக்கிடையில் வித்தியாசம் காணப்பட்டதால் இந்த தவறு ஏற்பட்டுள்ளதாகவும் நீதிமன்ற தண்டப்பணம் கணக்கீடு செய்யப்படும் போது நேர்ந்துள்ள கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டமை மற்றும் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டமை 2024 ஆண்டு நிதிக்கூற்றுக்கள் ஊடாக சரிசெய்வதெனவும், பொதுவில் மற்றும் | ஆண்டிற்குரிய சரியான நீதிமன்ற தண்டப்பண வருமானத்தை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | | ஹிங்குரங்கொட இரண்டு நீதிமன்றங்களின் பிரிவு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளதால் நிதிக்கூற்றில் காண்பித்துள்ள பெறுமதி சரியானதெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | நிதிநிலைமை கூற்றுடன் சமர்ப்பித்துள்ள அட்டவணை 05 இல் குறிப்பிடப்படும் செலுத்த வேண்டிய விஷேட வெகுமதி பெறுமதிக்குள் உள்ளடங்கும் 5 கோவைகளிற்கு உரிய வழங்க்கு செயற்பாடுகள் முடிவடைந்துள்ள போதும், சந்தேக நபர்களை விடுவித்தல், மரணித்தல், வழக்கு முடக்கி வைத்தல் போன்ற காரணங்களினால் செலுத்த முடியாத எஞ்சிய அரை பெறுமதியான ரூபா 5,567,500 தொகை நிதி நிலைமை கூற்றில் செலுத்த வேண்டிய விஷேட வெகுமதி பெறுமதிக்குள் போலியாக உள்ளடக்கியிருந்ததுடன், இப் பெறுமதி நிதி நிலைமை கூற்றில் செலுத்த வேண்டிய விஷேதட வெகுமதி செலவிற்கு மற்றும் திரண்ட நிதியத்திற்கு செம்மையாக்கி இருக்கவில்லை. | 2024 ஆண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது இந்த தவறை சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | செலுத்த வேண்டிய விஷேட வெகுமதி பெறுமதியினுள் உள்ளடங்கும் பெறுமதிகளின் சரியான தன்மையை உறுதி செய்து கொண்டு தேவையான செம்மையாக்கம் செய்ய வேண்டும். |
| (உ) | இஸ்தான தண்டப்பண வருமானத்தை இனங்காணும் போது 03 மாவட்ட செயலகங்ளின் வருமானம் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுவதால் வருட ஆரம்பத்தில் கிடைக்க வேண்டிய ரூபா 5,121,700 தொகை ஆண்டு வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், வருட இறுதியில் கிடைக்க வேண்டிய ரூபா 5,751,380 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதனால் ஆண்டின் இஸ்தான தண்டப்பண வருமானத்தின் தேறிய பெறுமதி ரூபா 629,680 தொகை குறைவாக காண்பிக்கப்பட்டது. | 2024 ஆண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது இந்த தவறை சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | ஆண்டிற்குரிய சரியான இஸ்தான தண்டப்பண வருமானத்தை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு

### 1.6.1 செலுத்த வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 50 சதவீதம் செலுத்தியிருந்த விஷேட வெகுமதி கோவை ஒன்றிற்குரியதாக 2011 ஆண்டளவில் சந்தேக நபர்கள் குற்றவாளிகள் என வழக்கு செயற்பாடுகள் முடிவடைந்துள்ள போதும், வெகுமதி தொகையின் எஞ்சிய அரைவாசியான ரூபா 625,000 தொகையை செலுத்தி தீர்த்திருக்கவில்லை. | பணிப்பாளர், குற்றப் புலனாய்வு பகுப்பாய்வு மற்றும் தடுப்பு பிரிவின் ஊடாக குறித்த கோவையை அழைப்பித்து எதிர்காலத்தில் கொடுப்பனவு செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | செலுத்த வேண்டிய விஷேட வெகுமதி பெறுமதியினுள் உள்ளடங்கும் பெறுமதிகளின் சரியான தன்மையை உறுதி செய்து கொண்டு தேவையான செம்மையாக்கம் செய்ய வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2023 ஏப்ரல் 26 திகதி இடம்பெற்ற பொது கணக்குகள் மீதான செயற்குழுக் கூட்ட செயற்குறிப்பின் இலக்கம் 11 கீழான கட்டளை | 1990.03.09 திகதிய அதிவிஷேட வர்த்தமானியின் மூலம் பிரசுறிக்கப்பட்ட கட்டளை பிரகாரம் பொலிஸ் வெகுமதி நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்படுவதனால் அக் கட்டளையினை உரிய முறைமையின் பிரகாரம் நிகழ் காலத்திற்கு பொருந்தும் வகையில் இற்றைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும், போக்குவரத்து பொலிஸ் அலுவலர்களிற்காக வழங்கும் வெகுமதித் தொகை அளவினை அதிகரிக்குமாறும் கட்டளை இடப்பட்டிருந்த போதும் அதற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறித்த கட்டளையை உரிய முறைமையின் பிரகாரம் நிகழ் காலத்திற்கு பொருந்தும் வகையில் இற்றைப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | பொது கணக்குகள் மீதான செயற்குழு கட்டளை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் | 2023 திசெம்பர் 31 திகதி விநியோகிக்கப்பட்ட | குறித்த 43 காசோலைகள் | நிதிப் பிரமாணம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 396 | போதும் கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சிய ரூபா 372,500 பெறுமதியான 43 காசோலைகள் தொடர்பில் நிதிப் பிரமாணம் 396 (இ) பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தொடர்பில் எனது சம இலக்கம் FD/09/05/2023 மற்றும் 2024.04.04 திகதிய கடிதம் மூலம் பணிப்பாளர், குற்றப் புலனாய்வு பகுப்பாய்வு மற்றும் தடுப்பு பிரிவிற்கு முன்நடவடிக்கை எடுக்குமாறு அறிவித்துள்ளதுடன், அந்த காசோலைகள் கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாவிடின் எதிர்காலத்தில் வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | 396 (இ) பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | நிதி மற்றும் கொள்கை திட்டமிடல் அமைச்சினால் 2014 பெப்ரவரி 17 திகதி அரச நிறுவனங்களின் கூட்டிணைந்த திட்டம் மற்றும் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் தொடர்பாக வெளியிடப்பட்ட PED/RED/01/04/2014/01 இலக்க சுற்றறிக்கையின் 04 பந்தி | குறித்த சட்டத்தில் குறிப்பிடப்படும் நோக்கத்தை அடைந்து கொள்ள இலக்காகக் கொண்ட வருடாந்த செயல் நடவடிக்கை திட்டமொன்றை தயாரித்திருக்கவில்லை. | காலாண்டு ரீதியாக செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், காலாண்டு முன்னேற்றம் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு, தேசிய வரவு செலவுத் திட்ட பணிப்பாளர் நாயகம், பொது நிதி பணிப்பாளர் நாயகம், கணக்காய்வாளர் நாயகத்திற்கு அறிக்கையிட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | தொடர்புடைய சுற்றறிக்கை பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 4,828,432,640 ஆன மிகையொன்றானதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,419,131,941 ஆனது. அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 2,409,300,699 ஆன வளர்ச்சி அவதானிக்கப்பபட்டது. இவ் வளர்ச்சிக்கு நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 2,321,069,311 அதிகரித்தமை முக்கிய காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | போக்குவரத்து பிரிவுப் பொறுப்பு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரின் போக்குவரத்து அறிவுறுத்தல் சுற்றறிக்கை இலக்கம் 149/2019 பிரகாரம் ஒரு மதுபோதை சாரதியை (பொது பயணிகள் போக்குவரத்து அல்லாத) கைது செய்யும் அலுவலரிற்கு ரூபா 2,500 வெகுமதி தொகையை செலுத்த முடியுமான போதும், மாதிரி பரிசோதனையின் பிரகாரம் 18 பொலிஸ் நிலையங்களினால் 5,449 மதுபோதை சாரதிகளை கைது செய்திருந்த போதும், குறித்த அலுவலர்களிற்கு 2023 ஆண்டினுள் எவ்வித வெகுமதி தொகையையும் செலுத்தியிருக்கவில்லை. | பொலிஸ் நிலையங்கள் 18 இனால் 5,449 மதுபோதை சாரதிகளை கைது செய்திருந்தது தொடர்பாக விசாரிக்கும் போது 13 பொலிஸ் நிலையங்களிற்கான பதில்கள் அனுப்பப்படாததுடன், ஏனைய பொலிஸ் நிலையங்களினாலும் வவுசர் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படாததால், எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாதிருக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | குறித்த ஆண்டினுள்ளே செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மாதிரி பரிசோதனைக்குட்பட்ட கடமையில் ஈடுபட்டிருக்கும் போது மரணித்த பொலிஸ் அலுவலர்களிற்கு கடந்த 04 ஆண்டு காலத்தினுள் ரூபா 1 முதல் 5 மில்லியன் வரையான வீச்சளவில் வெகுமதி கொடுப்பனவு காணப்பட்ட போதும், இதற்காக பொதுவாக இனங்கண்டு பிரமாணங்கள் அடிப்படையாகக் கொள்ள அல்லது பொதுவாக வழங்கப்பட்ட அறிவுறுத்தல் கோவையொன்று ஏனும் இருக்கவில்லை. | கடமையில் ஈடுபட்டிருக்கும் போது மரணித்த பொலிஸ் அலுவலர்களிற்காக அவர்களின் தங்கி வாழ்பவர்களுக்கு வெகுமதி தொகை செலுத்துவதற்கான பிரமாணங்கள் உள்ளடங்கிய பொது அறிவுறுத்தல் கோவை ஒன்றை வெளியிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | பொது அறிவுறுத்தல் கோவையொன்ற அறிமுகம் செய்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | ஆண்டு 03 மற்றும் ஆண்டு 04 வீதம் முழுநேர பாடநெறியை கற்பதற்காக சர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்திற்கு 2022 சனவரி 19 திகதி மற்றும் 2023 சனவரி 23 திகதி ஆரம்பமான 05 பட்டதாரி பாடநெரிக்கு 122 அலுவலர்கள் இணைக்கப்பட்ட போதும், முன்கூட்டிய திட்டமிடல் இன்றி மற்றும் போதிய ஏற்பாடு இல்லாத போது ஆரம்பிக்கப்பட்டுள்ள இக் கருத்திட்டத்திறகு வெகுமதி நிதியத்திலிருந்து 2023 சனவரி 17 திகதி ரூபா 60,550,000 தொகை பட்டதாரி பாடநெறி கட்டணமாக பொலிஸ் மாஅதிபரின் அங்கீகாரத்தின் மீது பொலிஸ் பெகுமதி நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. | பொலிஸ் அலுவலர்களின் திறன் மற்றும் கொள்ளவினை மேம்படுத்துவதனூடாக பொதுமக்களுக்கு உயர்ந்த சேவையை வழங்கும் நோக்கில் பட்டதாரி பாடநெறி கட்டணம் செலுத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | முன்கூட்டிய திட்டமிடல் மற்றும் அங்கீகாரத்தின் மீது செலவுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்ட வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் இனங்காணப்படாத கிடைப்பனவு பெறுமதியினுள் 2022 திசெம்பர் 30 திகதியன்று செலவு வைக்கப்பட்ட ரூபா 544,400 தொகையும், 2023 சனவரி 12 திகதி செலவு வைக்கப்பட்ட ரூபா 570,180 தொகையுமானதுடன், இந்த இனங்காணப்படாத கிடைப்பனவுகளிற்காக ஒரு வருட காலம் கடந்துள்ள போதும் இனங்கண்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023.12.21 திகதி வைப்புச் செய்யப்பட்ட போதும், இனங்காணப்படாத நேரடி வைப்புத் தொகையாக அந்த காசோலைகள் காசுப் புத்தகத்திற்கு எடுக்கப்பட்டு சரிசெய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | கால தாமதமின்றி இனங்காணப்படாத வங்கி மீதிகளை இனங்கண்டு கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | களுத்துறை பொலிஸ் பிரிவில் 2023 ஆண்டு இறுதியில் வெகுமதிகளிற்கு விண்ணப்பித்த பின்னர் செலுத்த வேண்டிய வவுச்சர்களின் எண்ணிக்கை 4,885 ஆனதுடன், அந்த வவுச்சர்கள் 03 முதல் 12 மாதங்கள் வரை தாமதமானதுடன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளின் மற்றும் பிரிவு பொறுப்பு அலுவலர்களின் வெகுமதிப் பணம் செலுத்துவ தொடர்பாக காணப்படும் நேரடி கண்காணிப்பு போதுமானதாக இல்லாதமை இந் நிலைமைக்கு காரணமாக உள்ளதாக அவதானிக்கப்பட்டது. | களுத்துறை பொலிஸ் பிரிவில் 2023 ஆம் ஆண்டில் செலுத்தப்படாத வவுச்சர்களின் எண்ணிக்கை 4,885 ஆனதுடன், ஏற்கனவே செலுத்தப்பட்ட வவுச்சர்களின் எண்ணிக்கை 3776 ஆகவும். அதன் பிரகாரம் செலுத்துவதற்கு மீதமுள்ள 1,509 வவுச்சர்களிற்காக எதிர்காலத்தில் கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | குறித்த ஆண்டிலேயே பணம் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நீதிமன்றங்கள் மூலம் பொலிஸ் வெகுமதி நிதியத்திற்கு பணத்தை அனுப்புப் போது 2023 திசெம்பர் 31 திகதியன்று 03 மாதங்கள் முதல் 07 மாதங்கள் வரையான தாமதத்துடன் 05 நீதிமன்றங்களால் வழங்கப்பட வேண்டிய தொகை ரூபா 12,026,458 ஆனது. இதன் பிரகாரம் நீண்ட கால தாமதத்துடன் வெகுமதி நிதியத்திற்கு வருமானம் சேகரிப்பதன் ஊடாக, நிதிப்பிரமானம் 128 (2) (உ) மற்றும் (ஊ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | 2023.12.31 திகதி கிடைக்க வேண்டிய நிலுவைத் தொகையிலிருந்து ரூபா 9,826,596 தொகை தற்போது கிடைத்துள்ளது. யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 2,199,862 தொகையை அழைப்பித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | குறித்த ஆண்டிலேயே வருமானம் சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| திருத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்துடன் உண்மையான பெறுமானங்களை ஒப்பிடுகையில் மொத்த வருமானம் 78 சதவீதம் வளர்ச்சியடைந்துள்ள போதும், மொத்த செலவுகள் 21 சதவீதம் வீழ்ச்சியடைந்தன் மீது மிகை 339 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. மீளாய்வாண்டில் விஷேட வெகுமதி செலவுப் பெறுமதி மதிப்பிடப்பட்ட தொகையை விட 82 சதவீதத்தால் குறைவடைந்தமையும், போக்குவரத்து வெகுமதி செலவுப் பெறுமதி மதிப்பிடப்பட்ட தொகையை விட 29 சதவீதத்தால் குறைவடைந்தமை மற்றும் களியாட்ட வெகுமதி முற்பண செலவு மதிப்பிடப்பட்ட செலவை விட 51 சதவீதம் குறைவடைந்தமையு இடம்பெற்றிருந்தது. 2023 திசெம்பர் மாதம் வரவு செலவுத் திட்டம் திருத்தப்பட்ட போதிலும், இத்தகைய வேறுபாடுகள் இருப்பதனூடாக வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படும் போது மற்றும் நிதிய முகாமைத்துவத்தின் போது போதிய கவனம் செலுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | வரவுசெலவுத் திட்டம் மற்றும் உள்ளவாறான பெறுமானங்களிற்கு இடையிலான வேறுபாடு குறையும் வகையில் மதிப்பீடுகளை தயாரிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | வரவுசெலவுத் திட்டம் தயாரிக்கும் போது மிகவும் நடைமுறை சாத்தியாமாக தயாரித்தல் மற்றும் வரவுசெலவுத் திட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |